# ST MATTHIAS

THE APOSTLE




# புனித மத்தியாஸ்

அப்போஸ்தலர்

மே 14

## புனித மத்தியாஸ் அப்போஸ்தலர்

இவர் நம் இரட்சகருடன் இருந்தவர்களில் ஒருவர். யூதாசுக்குப் பதிலாக ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. புனித இராயப்பர் இதைப் பற்றி எழுந்து பேசினர். "அருளப்பரின் ஞானஸ்நானம் முதல் ஆண்டவராகிய இயேசு நம் நடுவினின்று எடுத்துக கொள்ள பெற்ற நாள் வரை, அவர்நம்மோடு பழகிய காலமெல்லாம் நம்முடனிருந்தவர்களுள் ஒருவரை இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாக நம்மோடு சேர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது" என்று இராயப்பர் கூறினார். அவர்கள் இவரைக் குறிப்பிட்டனர். சீட்டுப் போட்டுப் பார்த்தார்கள். கடவுளை மன்றாடினார்கள். சீட்டு மத்தியாஸ் பேருக்கு வழிவே அவர் பதினொரு அப்போஸ்தலர்களோடு சேர்க்கப்பட்டார். அந்த தேர்தலின் பொழுது ஏறக்குறைய 120 பேர் அங்கிருந்தார்கள். ஆண்டவர் அனுப்பிய 72 சீடர்களுள் மத்தியாஸ் ஒருவர் உடலை அடக்கி ஒடுக்கவேண்டும் கிரமந்தப்பிய ஆசைகளையும் நாட்டங்களையும் அடக்கி ஆளவேண்டும் என்று பனித மத்தியாஸ் அடிக்கடி வற்புறுத்துவார் என புனித அலெக்சாந்திரியா சாந்தப்பர் கூறுகிறார். இவர் எத்தியோப்பியா நாட்டில் வேதத்திற்காகக் கொல்லப்பட்டார்.

**சிந்தனை:**

கிரமந்தப்பிய ஆசைகளையும், நாட்டங்களையும் அடக்கி ஆளவேண்டும்.

**செபம்:**

எங்களுக்காக உமது உடலைத் தண்டித்த யேசுவே, நாங்கள் எங்கள் உடலை அடக்கி ஆள உதவி செய்யும்.


SAINTS FUN FACTS
by John Sheppard
St. Matthias was chosen as the twelfth apostle as a replacement for Judas. The criteria was the replacement had to have been a disciple from the beginning and baptised by John. The apostles cast lots and Matthias was chosen.
Matthias!
Matthias!